# கார்னேஷன்

**1. சிவப்பு சிலந்தி, டெட்ரானைக்கஸ் யுரிடீகே, டெட்ரானைக்கஸ் சின்னாபரிக்கஸ்**

**சேதத்தின் அறிகுறிகள்**

- இலையின் அடியிலிருந்த சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- தாக்கப்பட்ட இலைகள் வெளுத்துப் போய்விடும்.
- மேலும் இலைகள் அழுக்கடைந்த நூலாம்படைகள் சுற்றியிருக்கும்.
- கடும் தாக்குதலினால் செடியின் வளர்ச்சிக் குன்றிவிடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள்**

- இலைகள், நேராகவும், தட்டையாகவும் இருக்கும் எதிர்ப்புச் சக்தி கொண்ட இரகங்களைத் தேர்வு செய்து நடவேண்டும்.
- 1 லிட்டர் தண்ணீரில் 2 மிலி டைக்கோபால் அல்லது நனையும் கந்தகத்தூள் 3 கிராம் கலந்து தெளிக்கவும்.
- 1 எக்டருக்கு 50 மிலி ஃப்ளுவெலிநேட் தெளித்தால் டெட்ரானைக்கால் சின்னாபரிக்கஸ் தாக்கத்தை குறைக்கிறது.

**2. அசுவினி, ஏஃபிஜ் காசிப்பை**

**சேதத்தின் அறிகுறிகள்**

- பூச்சிகள், இலை, மொட்டு மற்றும் இளந்தளிர்களின் சாற்றை உறிஞ்சும்.
- பல வர்ண இலை வைரஸ் நோயைப் பரப்பும்.

பூச்சியின் விபரம்

கத்தரியில் உள்ளதை இணைக்கவும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

- 1 லிட்டர் தண்ணீரில் 1 மிலி டைமீதோயேட் கலந்து பூ மலர்வதற்கு முன்பாக தெளிக்கவும்.

3. இலைப்பேன் : ஃதிரிப்ஸ் டாப்சி

சேதத்தின் குறிக்கோள்

- இலையின் சாற்றை உறிஞ்சி சேதப்படுத்தும்.
- செடிகள் மஞ்சளாகிவிடும்.
- செடியின் வளர்ச்சி கடுமையாக பாதிக்கும்.
- பூவில் கோடுகள் காணப்படும்.

பூச்சியின் விபரம்

- வெளிர் மஞ்சள் நிறத்தில் இருக்கும்.

கட்டுப்படுத்தும் முறைகள்

1 லிட்டர் தண்ணீரில் 1 மிலி டைமீதோபேட் (அ)

ஃபென்நைட்ரோதியான் (அ) மாலத்தியான் தெளிக்கவும்.

4. கார்னேஷன் டார்டிரிக்ஸ் அந்துப்பூச்சி, டார்ட்ரிக்ஸ் .ப்ருநுபேட்டர்

சேதத்தின் அறிகுறிகள்

- புழுக்கள் இலைகளை பினைத்து அதனுள்ளிருந்து சாப்பிட்டு அழிக்கும்.
- புழுக்களின் தாக்கம் வளரும் நுனித்தண்டுகளில் அதிகமாக காணப்படும்.

- புழுக்கள் மொட்டுக்களிலும் துளையிடும்.

**கட்டுப்படுத்தும் முறைகள் :**

- **ஏக்கருக்கு மானோகுரோட்டோஃபாஸ்** @300**மி.லி (அ) எண்டோசல்ஃபான்** @400 **மி.லி தெளிக்க வேண்டும்.**